[1971 டிசம்பர் 14

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல்கள் நடைபெற்று விடுகின்றன. கையாடல் கண்டுபிடிக்கப்பட்ட பின் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் பணத்தை திருப்பிச் செலுத்திவிடுகிருர்கள். அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, அதுவும் ஆராயப்பட்டு வருகிறது.

உழவர்களுக்கு வழங்கப்படும் டிராக்டர்கள்

* 381 வினு—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத்துறை தொழிற் கழகத்தின் சார்பில், எந்தெந்த வகையான டிராக்டர்கள் தற்போது விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள், வெளி நாட்டிலிருந்து டிராக்டர்கள் வரவழைத்து தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்று கூறினுர். இவ்வளவு தரப்பட்டும், தேவையின் அளவு பூர்த்தி ஆகாத சூழ்நிலை இருக்கிறது. நெருக்கடிச் சூழ்நிலை தீர்ந்த பிறகாவது இந்த டிராக்டர் நெருக்கடியைப் போக்க உரிய தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இதற்கு ஏற்கனவே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு டி-25, செட்டார் 2011 ஆகிய டிராக்டர்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனுல் குறிப்பிட்ட ஒரு டிராக்டரையே தான் தேவை என்று எல்லோரும் விரும்புகிற காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிற, குறிப்பாக, சோவியத் யூனியனிலிருந்து வருகிற டிராக்டர்கள் மேலானவை, உறுதியானவை என்று சொல்லப்படுகிறது. அப்படியானுல், அந்த நாட்டிலிருந்து அதிகமாக டிராக்டர்கள் வரவழைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, டி-25 ரஷ்ய டிராக்டர் தான்.

@ 400—404 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, ரஷ்ய டிராக்டர்களை விட நமது நாட்டில் உற்பத்தியாகும் டிராக்டர்கள் மிக உபயோககரமாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே, நமது நாட்டில் உற்பத்தியாகும் டிராக்டர்களையே பாபுலரைஸ் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நமது நாட்டு டிராக்டர்களும் வாங்கப்படுகின்றன. ஆனால், இதை வாங்க மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, டிராக்டர் விலை யெல்லாம் 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று ஏறிவிட்டது. மத்திய சர்க்காருக்கு இதை எடுத்துச் சொல்லி போடப்படுகிற வரிகளைக் குறைக்க அரசு முன்வருமா? டிராக்டர்களின் விலையைக் குறைக்க அரசு கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, டிராக்டர்களின் விலை ஏதும் ஏறவில்லை. போடப்படுகின்ற சர் சார்ஜ் தான் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆகவே தான் விலை உயர்ந் திருப்பதாக தெரிகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நமது நாட்டில் உற்பத்தியாகிற டிராக்டர்கள் 35 பரித்திறன் உடையவை. 30 பரித் திறன் டிராக்டர் கூட 30 ஆயிரம் ரூபாய் விலை விற்கிறது. இருந்தும் இவை தரத்தில் சிறந்தனவாக இல்லை என்று சொல்லி, வாங்குகிற வர்கள் எல்லாம் இவை வேண்டாம், வெளி நாட்டு டிராக்டர்கள் தான் வேண்டும் என்று கேட்கிறார்கள். நம் நாட்டில் உற்பத்தி ஆகும் டிராக்டர்களின் தரம் குறைந்திருக்கக் காரணம் என்ன? அதை அரசு அறிய முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நமது நாட்டில் தயாராகும் டிராக்டர்கள் தரம் பற்றிய சந்தேகம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், நமது நாட்டில் தயாரிக்கப்படும் டிராக்டர்கள் மிகச் சிறந்த தரத்தை உடையவை. எல்லோராலும் பாராட்டப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவில்பட்டியில் பருத்தி சாகுபடி.

*382 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டியில் பருத்தி அபிவிருத்தி சாகுபடித் திட்டத்தின் கீழ் 1970-71-ம் ஆண்டில் செலவான தொகை என்ன?

(இ) அதன் மூலம் வரவு எவ்வளவு?